Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 44 of 2024**

DATE :07.04.2026

Depositions of witness for Prosecution

PW: 6

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா | Caste | |
| Father/Husband's Name | சௌந்தர பாண்டியன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07 th day of April 2026

**(2, 4, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. 3 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி இறந்துவிட்டார். வழக்கறிஞர் திரு. பாபுசாமி ஆஜர்)**

**சாட்சி காணொளி மூலம் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்தில் ஆஜரானார்**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2016 அன்று வத்திராயிருப்பு வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, வத்திராயிருப்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.அருண்பாண்டியன் என்பவர் மதுரை மாண்புமிகு உயர்நீதிமன்ற கிளை Crl. O.P. (MD) 24076/2015 dated 17.12.2015 உத்தரவு பிரகாரம் வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண் 20/2016, சட்ட பிரிவுகள் 420, 109, 448, 294(b), 323, 506(1) IPC ஆக வழக்கினை பதிவு செய்துள்ளார். மேற்படி வழக்கு கோப்பினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான வ. புதுப்பட்டி சென்று அன்றைய தினம் 11 மணிக்கு சாட்சிகள் பாலமுருகன் மற்றும் ராகவன்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் கௌரி, சுந்தர்ராஜன், கோபால்சாமி, பாலமுருகன், ராகவன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த வத்திராயிருப்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அருண் பாண்டியன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் பணி மாறுதல் பெற்று திருத்தங்கல் காவல் நிலையம் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பினை பின்னர் வந்த ஆய்வாளர் நாகராஜன் என்பவர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

என்னுடைய விசாரணையில் சொத்தினை கிரையம் பெறுவதற்காக ரூ.75,000/– ஆக பேசி முடிவு செய்து முன் தொகையாக ரூ.66,000/– கொடுக்கப்பட்டதாக என்னுடைய விசாரணையில் எதுவும் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் சாட்சிகள் விசாரணையில் தெரிந்து கொண்டேன். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. புகார்தாரரின் தம்பி பரணி என்பவரின் பெயரில் முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொண்டதாக சாட்சிகள் சொல்லியுள்ள நிலையில் அந்த ஒப்பந்தத்தை நான் எதுவும் பார்வையிட்டேனா என்றால் இல்லை. புகார்தாரரின் தம்பி பரணியை சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரரை எதிரிகள் தாக்கியதாக சொல்லியுள்ள நிலையில் புகார் அவருக்கு ஏற்பட்ட காயத்துக்காக மருத்துவமனை எதுவும் சென்றாரா என்றும் காயச் சான்றிதழ் எதுவும் நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேனா என்றால் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

பிரச்சனை உரிமையியல் சார்ந்து இருப்பதால் தரப்பினர்களை உரிமையியல் நீதிமன்றத்தை நாடுமாறு நாங்கள் அறிவுரை எதுவும் வழங்கினோமா என்றால் இல்லை. கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்குமாறு புகாரதாரர் 3 மற்றும் 4 எதிரிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில் அந்த அறிவிப்பை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. புகார்

அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு 2வது எதிரி ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் தான் எதிரிகள் மீது இந்த வழக்கு மோசடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பெறுவதற்கு முன்பு எங்களுடைய காவல் நிலையத்தில் இந்த பிரச்சனை சம்பந்தமாக புகார் மனு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் புகார் மனு கொடுக்கப்பட்டு அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டுள்ளது. புகார் மனு ஏற்பு ரசீது எண்ணை இந்த வழக்கில் நாங்கள் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் மனு ஏற்பு ரசீது எண் 451/2015. இந்த வழக்கின் எதிரிகள் புகார்தாரரின் மீது ஒரு புகார் கொடுத்தார்கள் என்றும் அந்த புகாருக்கு புகார் மனு ஏற்பு ரசீது எதுவும் காவல் நிலையத்திலிருந்து வழங்கப்படவில்லை என்று சொன்னால் எதிரிகள் எந்த புகார் மனுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. நான் ஆவணங்களை சரிவர பார்வையிடாமல் எதிரிகள் மீது பொய்யாக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த வழக்குச் சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

முறையாக புலன் விசாரணை செய்யாமல் ஆவணங்களை வழக்குக்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகள் மீது இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு